# இரும்பின் குரல்

AMMAN-TRY

இது ஒரு **AMMAN - TRY**-யின் முயற்சி

திருச்சி | ஜனவரி 2023 | 12 பக்கம் | இலவசம் | பதிப்பு 6

**AMMAN-TRY**
**TMT BARS**



சிறப்பானதொரு துவக்கம்.
இனிதே ஆரம்பம்.






தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக அதிநவீன உருட்டாலை

# AMMAN-TRY Sponge & Power (P) Ltd.,
## Fully Automated High Speed No-Twist Block Technology

1978 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட AMMAN-TRY குழுமம், கடந்த 44 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்து தற்போது தென்னிந்தியாவிலேயே முன்னணி ஸ்டீல் உற்பத்தியாளராக விளங்குகின்றது. தமிழ் நாட்டில் முதன் முறையாக புதிய தொழில்நுட்பம், புதிய தயாரிப்புகள், அதிநவீன உருட்டாலை என்று எல்லாவற்றிலும் முன்னோடியாக விளங்குகின்றது. அதனை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:



- AMMAN-TRY நிறுவனம் தொடக்கத்திலிருந்தே 100% ISI குறியிடப்பட்ட கம்பிகளை உற்பத்தி செய்கின்றது. (2000 முதல்)
- ஆரம்பத்திலிருந்தே ISO சான்றிதழை பெற்று உற்பத்தி செய்கின்றது. (2001 முதல்)
- TMT முறையை கொண்டு கம்பிகள் தயாரிக்கப்படுகின்றன. (2004 முதல்)
- CRS கம்பிகள் அறிமுகப்படுத்தப்பட்டு உற்பத்தி துவங்கியது. (2007 முதல்)
- RMS- Ready Made Steel Rings உற்பத்தி துவங்கியது. (2014 முதல்)
- தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக அதிநவீன உருட்டாலையை நிறுவியுள்ளது. (2022 முதல்)






மேற்குறிப்பிட்ட AMMAN-TRY -ன் அதிநவீன புதிய உருட்டாலை 19 செப்டம்பர் 2022 அன்று நிறுவனத் தலைவர் திரு.SP.முத்துராமலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவில் 200-க்கும் மேற்பட்ட விற்பனையாளர்கள் கலந்துகொண்டார்கள். இதனை தொடர்ந்து விற்பனையாளர்கள் அனைவரும் பில்லட்டுகளில் இருந்து கம்பிகள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது என்பதை நேரில் பார்வையிட்டனர். பின்பு விற்பனையாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் AMMAN-TRY நிறுவனம் எவ்வாறு 4 ஆண்டுகள் உழைப்பிற்கு பிறகு தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக அதிநவீன உருட்டாலையை நிறுவியது என்பதை பற்றியும், உருட்டாலையின் சிறப்பம்சங்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் எங்களின் விற்பனையாளர்களில் முதல் 25நபர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதனை அடுத்து AMMAN-TRY-ன் அதி நவீன உருட்டாலையை நிறுவுவதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து ஊழியர்கள் / குழுவினர்கள் (Civil, Mechanical, Electrical, Purchase, Stores, Office, Contractors, Suppliers & Vendors) அனைவரையும் சிறப்பித்தார்கள். இறுதியாக பங்குபெற்ற அனைவரும் சென்னைக்கு அழைத்துச் சென்று இரவு விருந்துடன் இந்நிகழ்வு நிறைவு பெற்றது.

# 550 XD சிறப்பம்சங்கள்

## LPLS - (Low Phosphorus & Low Sulphur)

## "550 XD" Microstructure




இந்தியாவில் கட்டுமானத்துறையில் ஏற்பட்டு வரும் வளர்ச்சியை கருத்தில் கொண்டு வாடிக்கையாளர்கள் மத்தியில் AMMAN-TRY கம்பிகளுக்கு ஏற்பட்டுள்ள Demand- ஐ பூர்த்தி செய்யும் பொருட்டு இந்த உருட்டாலை நிறுவப்பட்டது. அவற்றின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு

- உருகிய இரும்புக்குழம்பை பில்லட்டாக மாற்றி அதனை நேரடியாக கம்பியாக மாற்றம் செய்யும் நவீன தொழில்நுட்ப முறையை அறிமுகம் செய்து இருக்கின்றோம்.

- Steel Melting Shop - Sponge Iron, Ferro Silicon, Silico Manganese, Aluminium, ஆகிய வேதிப்பொருட்களை தேவையான அளவில் சேர்த்து 30 Ton Capacity கொண்ட Induction Furnace-ல் உருக்கி இரும்புக்குழம்பாக (Molten Metal) மாற்றி அவை பில்லட்டாக உற்பத்தி செய்யப்படுகின்றது.

- Hot Charging Method-ல் பில்லட் – ன் வெப்பநிலை ஒரே சீராக இருக்கும். இதனால் கம்பிகளுக்கு சீரான வேதியியல் பண்புகளும், அதிக வலிமையும், எளிதில் வளையும் தன்மையும் கிடைக்கின்றது.

- இரும்பு உருகி பில்லட் உருவாகி அதன் வெப்பம் தணியும் முன்பே கம்பிகளாக உற்பத்தி செய்ய கண்டு பிடிக்கப்பட்ட அதிநவீன தொழில் நுட்பம்.


- TMT Quenching - Tempcore TMT Technology மூலமாக கம்பிகளை விரைவாக குளிர்விக்கும் போது (Rapid Quenching) கம்பிகளில் சிறந்த மைக்ரோ நுண்ணமைப்பு மாற்றம் ஏற்படுகின்றது.

- Automatic Cooling Bed - கம்பிகள் ஒன்றோடு ஒன்று உரசாமலும், நான்கு புறத்திலிருந்தும் இயற்கையான காற்றோட்டத்துடன் இருப்பதால் உறுதியான மைக்ரோ நுண்ணமைப்பு ஏற்படுகின்றது. இது கம்பிகளுக்கு அதிக வலிமையையும் எளிதில் வளையும் தன்மையையும் கொடுக்கின்றது. ►



















- பாஸ்பரஸ் மற்றும் சல்ஃபர் இந்த இரண்டின் வேதிப்பண்புகளும் கட்டுமான கம்பிகளுக்கு எதிரியாக வல்லுநர்களால் பார்க்கப்படுகின்றது. இவை இரண்டும் கம்பிகளுக்கு எளிதில் உடையும் தன்மையை ஏற்படுத்தி நீண்டுமீளும் தன்மையைக் குறைத்து கட்டிடத்தின் ஆயுளைக் கேள்விக் குறியாக்கிவிடுகின்றது. இவற்றிலிருந்து உங்கள் கட்டிடங்களை பாதுகாக்கவே LPLS கொண்ட 550 XD கம்பிகளை வழங்குகின்றது AMMAN-TRY.

- அதிக பாதுகாப்பை தருவதற்காக 10%-15% அதிக வலிமை (Yield Strength) கொண்டது 550 XD. வலிமை அதிகமானாலும், வளைக்க எளிதாகவும், Ductility(நீட்சித்தன்மை)அதிகமாகவும் இருப்பதற்காக குறைந்த அளவில் பாஸ்பரஸ் & சல்ஃபர் உள்ளடக்கியது 550 XD.

- **15%-20% சேமிப்பு** - கம்பியின் வலிமை அதிகமாக இருக்கும் பட்சத்தில், கான்கிரீட்-ல் பயன்படுத்தப்படும் கம்பியின் பரப்பளவை குறைத்துக் கொள்ள வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது. அனுபவம் வாய்ந்த இன்ஜீனியர்கள் மற்றும் கட்டிட வடிவமைப்பாளர்களின் வழிகாட்டுதலை பின்பற்றினால் 550 XD நிச்சயம் 15%-20% சேமிப்பை தரும்.

- **அதிக Martensite Structure - 550 XD** கம்பியின் உட்புறத்தில் உள்ள மூன்று வகையான மைக்ரோ நுண்ணமைப்பில் மார்ட்டன்சைட்-ன் பரப்பளவு 30%-40% அதிகமாகவும், சீராகவும் இருப்பதால் கம்பியின் அனைத்து பகுதியிலும் வலிமை சீராக இருக்கின்றது. ■

மேலும் விவரங்களுக்கு
QR Code- ஐ
Scan செய்யவும்




ஆழ் கடலில் ஓர் பயணம் என்ற திட்டத்தின்படி 3 மாதங்களில் இலக்கை அடைந்த விற்பனையாளர்களுக்கு 2022 செப்டம்பர் மாதம் 17 முதல் 19 வரை பிரமாண்டமான **Cordelia Cruise** கப்பல் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டு, 150-க்கும் மேற்பட்ட விற்பனையாளர்கள் கலந்து கொண்டு மகிழ்ந்தார்கள். ■

# AMMAN-TRY-ன் மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சி கூடங்கள் திறப்பு விழா

13 ஆகஸ்ட் 2022 அன்று **AMMAN-TRY**-ன் நாகமங்கலம் தொழிற்சாலையில் புதியதாக மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சிக்கூடம் திறக்கப்பட்டது. இக்கூடத்தில் **Metallurgical Microscope**, **100 MT UTM** கருவி மற்றும் **Spectrometer** வைக்கப்பட்டுள்ளது. **100 MT UTM** கொண்டு கம்பியின் வலிமை, மற்றும் நீட்சித்தன்மையை கண்டறிய முடியும். மேலும் **UTM** கருவி மூலம் **Bend Re-Bend Test** செய்து கம்பியின் வலிமையை கண்டறிய முடியும். ஒவ்வொரு கம்பிகளும் சிறந்த முறையில் தர பரிசோதனை செய்த பின்னரே விற்பனைக்கு அனுப்பப்படுகின்றது.





மேலும் கும்பக்குறிச்சி தொழிற்சாலையின் ஆராய்ச்சிக்கூட திறப்பு விழாவிற்கு சுமார் 40 பொறியாளர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள். இக்கூடத்தில் **Metallurgical Microscope**, **100 MT UTM (Electronic & Analog)** கருவி மற்றும் **Spectrometer** வைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு கம்பிகள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது என்பதை பற்றியும், கம்பிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் மூலப்பொருட்கள் பற்றியும், கம்பிகளை பரிசோதிக்கும் முறைகள் பற்றியும் விவரிக்கப்பட்டது. பிறகு பொறியாளர்கள் அனைவருக்கும் இரவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு விழா இனிதே நிறைவுற்றது. ■











# விற்பனையாளர் சந்திப்பு

**AMMAN - TRY** நிறுவனம் தனது அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் விற்பனையாளர் சந்திப்பு நடத்திக்கொண்டு வருகிறது. இந்த வருடம் விற்பனையாளர்கள் சந்திப்பு 20 மே 2022 முதல் 22 மே 2022 வரை ஹோட்டல் **Accord Highland**, ஊட்டியில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் விற்பனை இலக்கை அடைந்தவர்களுக்கு தங்க நாணயம் பரிசாக வழங்கப்பட்டது. அடுத்தகட்டமாக 12 ஜீன் 2022 அன்று ரம்யாஸ் ஹோட்டல், திருச்சியில் விற்பனையாளர் கூட்டம் சிறப்பாக நடத்தப்பட்டது. இதனையடுத்து விற்பனையாளர்கள் கூட்டம் கடந்த 02 ஜீலை 2022 அன்று **AMMAN - TRY** தலைமை அலுவலகத்தில் நடத்தப்பட்டது. ■


























# பார்பெண்டர் சந்திப்பு

பார் பெண்டர்களுக்கு விழிப்புணர்வு அளிக்கும் வகையில் AMMAN - TRY நிறுவனம் எங்களது விற்பனையாளர்களோடு இணைந்து பார்பெண்டர் சந்திப்பு நடத்தி வருகின்றது. இதில் பங்குபெறும் அனைவருக்கும் AMMAN-TRY 550 XD கம்பிகளுக்கும் மற்ற 550 கம்பிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள், AMMAN -TRY கம்பியின் Micro Structure, அதன் சிறப்பம்சங்கள், CRS கம்பிகளின் பயன்பாடு, AMMAN - TRY கம்பிகள் தேவையான அளவுகளில் கிடைப்பதை பற்றியும் மற்றும் Ready Made Rings பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. பின்னர் இச்சந்திப்பில் பங்கு பெற்ற அனைவருக்கும் T-Shirt, Cap மற்றும் Silver Utensils அன்பளிப்பாக வழங்கப்பட்டு இரவு விருந்துடன் இந்நிகழ்வு நிறைபெற்றது.













## பார்பெண்டர் சந்திப்பு பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

- 10 ஜூன் 2022 அன்று ரஹ்மானியா டிரேடர்ஸ், கரம்பக்குடியில் பார்பெண்டர் சந்திப்பு நடைபெற்றது. இதில் 100 பார்பெண்டர்கள் கலந்து கொண்டனர். பின்னர் பார்பெண்டர் திட்டத்தில் இலக்கை அடைந்தவர்களுக்கு Mixie, Iron box, Smart Phone, தங்க நாணயம் உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்பட்டது.
- வஹாப் ஏஜென்சிஸ், ஆலங்குடியில் 16 ஜூன் 2022 அன்று பார்பெண்டர்கள் சந்திப்பு சமுதாய கூடத்தில் நடைபெற்றது. 120 பார்பெண்டர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள்.
- 18 ஜூன் 2022 அன்று கோல்டன் ஸ்டீல், திருப்பத்தூரில் பார்பெண்டர்கள் சந்திப்பு சத்யா மஹாலில் சிறப்பாக நடைபெற்றது. இதில் 100-க்கும் மேற்பட்ட பார்பெண்டர்கள் கலந்து கொண்டார்கள்.
- சேலம் மாவட்டத்தில் உள்ள நமது விற்பனையாளர்கள் கடைகளில் பார்பெண்டர்கள் சந்திப்பு சிறப்பாக நடைபெற்றது. அய்யனார் ஸ்டீல் டிரேடர்ஸ், தீவட்டிப்பட்டியில் 29 ஜூன் 2022 அன்று நடந்த கூட்டத்தில் சுமார் 80-க்கும் மேற்பட்ட பார்பெண்டர்கள் கலந்து கொண்டார்கள்.
- 30 ஜூன் 2022 அன்று ஸ்ரீ செல்வ விநாயகா ஏஜென்சிஸ், தாரமங்கலத்தில் நடத்தப்பட்ட பார்பெண்டர்கள் சந்திப்பில் 55-க்கும் மேற்பட்ட பார்பெண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.
- 01 ஜூலை 2022 அன்று ஸ்ரீ ஆண்டாள் டிரேடர்ஸ், சின்னப்பம்பட்டியில் நடந்த பார்பெண்டர்கள் சந்திப்பில் சுமார் 90-க்கும் மேற்பட்ட பார்பெண்டர்கள் கலந்து கொண்டார்கள்.
- K.B.S ஸ்டீல்ஸ், கரூரில் 06 ஜூலை 2022 அன்று S.K.P Mahal-ல் நடந்த பார்பெண்டர் சந்திப்பில் 140 பார்பெண்டர்கள் பங்கு பெற்றார்கள்.
- 07 ஜூலை 2022 அன்று வைரம் ஸ்டீல், தாராபுரத்தில் அவர்கள் கடையில் பார் பெண்டர்கள் சந்திப்பு சிறப்பாக நடைபெற்றது. இதில் சுமார் 90 பார்பெண்டர்கள் கலந்து கொண்டார்கள்.
- உதயம் டிரேடர்ஸ், கிருஷ்ணராயபுரத்தில் 08 ஜூலை 2022 அன்று P.S Mahal-ல் நடந்த பார்பெண்டர்கள் சந்திப்பில் 90 பார் பெண்டர்கள் கலந்து கொண்டார்கள்.
- 15 ஜூலை 2022 அன்று பாரத் ஸ்டோர்ஸ், பெரம்பலூரில் டீலர் கடையில் நடந்த பார்பெண்டர்கள் சந்திப்பில் 50-க்கும் மேற்பட்ட பார்பெண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.
- வேலன் டிரேடர்ஸ், திருக்காட்டுப்பள்ளியில் 14 ஜூலை 2022 அன்று டீலர் கடையில் பார்பெண்டர்கள் சந்திப்பு நடைபெற்றது. இதில் சுமார் 50 பார்பெண்டர்கள் கலந்து கொண்டார்கள். ■

# பொறியாளர் சந்திப்பு

AMMAN - TRY நிறுவனத்திலிருந்து **QC, Production** மற்றும் **Sales Team** இணைந்து பல்வேறு பொறியாளர்களை நேரில் சந்தித்து **AMMAN-TRY 550 XD** கம்பிகளின் சிறப்பம்சம் பற்றியும், கம்பிகள் தயாரிக்கும் முறை பற்றியும், தர பரிசோதனை செய்யும் முறை பற்றியும், **AMMAN-TRY TMT** கம்பிகளுக்கும் மற்ற லோக்கல் பிராண்ட் கம்பிகளுக்கும் உள்ள தர வேறுபாட்டை பற்றியும், **CRS** மற்றும் **Ready Made Rings** பற்றியும் விளக்கம் அளித்தார்கள். பின்னர் அனைத்து பொறியாளர்களுக்கும் **Diary, Measuring, Tape, Brochure** மற்றும் **Flyer** வழங்கப்பட்டது. அதனை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

- நமது விற்பனையாளர் ஸ்ரீ விநாயகா ஏஜென்சிஸ், மின்னாம்பள்ளி உடன் இணைந்து 25 மே முதல் 28 மே 2022 வரை சேலம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பொறியாளர்கள் சந்திப்பு நடத்தப்பட்டது. **AMMAN-TRY QC, Production** மற்றும் **Sales Team** 30 மே 2022 அன்று மதுரையில் உள்ள பொறியாளர்களை சந்தித்தார்கள்.
- 01 மே 2022, 04 மே 2022 மற்றும் 08 மே 2022 அன்று திருச்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பொறியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.
- 02 மே 2022 அன்று நத்தம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பொறியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.
- கோவை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பொறியாளர்கள் சந்திப்பு கடந்த 07 மே 2022, 08 மே 2022 மற்றும் 09 மே 2022 அன்று நடைபெற்றது.
- 10 மே 2022 அன்று திருநெல்வேலி பகுதியில் பொறியாளர் சந்திப்பு நடைபெற்றது. ■










## CIVIL ENGINEERS ASSOCIATION AND REAL ESTATE DEVELOPERS & BUILDERS ASSOCIATION OF INDIA





10 ஜூலை 2022 அன்று Civil Engineers Association and Real Estate Developers coalition திருச்சியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் டைட்டில் ஸ்பான்சர் AMMAN-TRY நிறுவனம் என்பதில் பெருமிதம் கொள்கிறோம். இந்த நிகழ்ச்சியில் தமிழகம் முழுவதும் இருந்து 3000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில் பங்குபெற்ற அனைவருக்கும் AMMAN-TRY TMT கம்பிகளின் தரத்தை பற்றியும், உபயோகிக்கும் மூல பொருட்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதை தொடர்ந்து பங்கு பெற்ற அனைவருக்கும் **Pen, Keychain, Brochure** மற்றும் **Catalogue** வழங்கப்பட்டது.

கடந்த 01 செப்டம்பர் 2022 முதல் 04 செப்டம்பர் 2022 வரை அகில இந்திய கட்டுநர் வல்லுநர் சங்கம் கும்பகோணம் மையம் நடத்திய மாபெரும் கட்டுமான பொருட்களின் பொருட்காட்சியில் **AMMAN - TRY** நிறுவனம் பங்கேற்றது. இந்நிகழ்ச்சியில் பங்குபெற்றவர்களுக்கு **AMMAN - TRY** கம்பிகள் தயாரிக்கும் முறை பற்றியும், தயாரிக்க பயன்படுத்தும் உயர்தர மூலப்பொருட்கள் பற்றியும் **CRS** மற்றும் **Ready Made Rings** சிறப்பம்சங்கள் பற்றியும் விவரிக்கப்பட்டது. நினைவு பரிசாக **Keychain, Pen, ATM Card Holder** போன்றவை வழங்கப்பட்டது. ■

# 75 வது சுதந்திர தினத்திற்காக AMMAN - TRY நிறுவனத்தின் பங்களிப்பு




தமிழகம் முழுவதும் உள்ள எங்களது விற்பனையாளர்கள் மூலமாக வாடிக்கையாளர்களுக்கு **AMMAN-TRY** நிறுவனம் சார்பாக 3000 தேசிய கொடிகள் வழங்கப்பட்டது. நமது 75-வது சுதந்திர தினத்தை போற்றும் வகையிலும், நமது தேசப்பற்றை வெளிப்படுத்தும் விதத்திலும், நமது பிரதமர் கூறியவாறு அனைவரின் வீட்டில் தேசிய கொடி ஏற்றப்பட வேண்டும் என்பதற்காக **AMMAN-TRY** நிறுவனத்தின் சிறிய முயற்சி, மேலும் 15 ஆகஸ்ட் 2022 அன்று **AMMAN-TRY** நிறுவன தலைவர் திரு. SP.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் புதிய அலுவலகத்தில் கொடியேற்றப்பட்டது. ■








# புதிய கிளை திறப்பு விழா




- 13 ஜூன் 2022 அன்று எங்கள் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளராகிய திருச்சி ஸ்டீல்ஸ், திருப்பத்தூரின் புதிய கிளை திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.


- மேலும் எங்கள் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளராகிய ஸ்ரீவிநாயகா ஏஜென்சிஸ், மின்னாம்பள்ளியின் புதிய கிளை 31 ஆகஸ்ட் 2022 அன்று சிறப்பாக திறக்கப்பட்டது. ■







# விபூதி பாக்கெட் அன்பளிப்பு



மதுரை, திருச்சி, ஒசூர், சேலம், தர்மபுரி, கோவை, தென்காசி, நாமக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், திருநெல்வேலி, திருவாரூர், புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, கரூர், சிவகங்கை, விருதுநகர், கன்னியாகுமாரி, கடலூர், திருவண்ணாமலை, மயிலாடுதுறை, மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள 70-க்கும் மேற்பட்ட பிரசித்தி பெற்ற வழிபாட்டு ஸ்தலங்களுக்கு **AMMAN-TRY** நிறுவனம் சார்பில் 1,74,000-க்கும் அதிகமான விபூதி பாக்கெட்டுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. ■













**AMMAN-TRY** நிறுவனத்தில் பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு அறிவூட்டும் வகையில் **Factory Visit**-ற்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வரும் மாணவ மாணவியர்களுக்கு கம்பி தயாரிக்கும் தொழிற்சாலை எவ்வாறு செயல்படுகிறது என்பதை பற்றியும், **TMT** கம்பிகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் பற்றியும், கம்பிகள் தயாரிக்கும் முறை பற்றியும், கம்பிகளுக்கு செய்யப்படும் தர பரிசோதனை பற்றியும் எடுத்துரைக்கப்படுகின்றது. கடந்த 10 ஜீன் 2022 அன்று தஞ்சை பெரியார் மணியம்மை கல்லூரி மாணவ மாணவியர் **AMMAN-TRY** தொழிற்சாலைக்கு வருகை தந்திருந்தார்கள். இதனையடுத்து 23 ஜீலை 2022 அன்று **Trichy Plus, Manidham** மாணவர்கள் வருகை தந்து பயன்பெற்றார்கள். ■





# கட்டுமானத்திற்காக பயன்படுத்தப்படும் பொருட்கள் மணல், சிமெண்ட மற்றும் TMTகம்பிகள்


ஒவ்வொரு கட்டிடமும் ஒவ்வொருவரின் கனவு. அந்த கனவு கட்டிடம் அவர்கள் கட்டும் போது பயன்படுத்தும் பொருட்களைச் சார்ந்தது. அது மிக பெரிய அடுக்கு மாடி கட்டிடமாக இருந்தாலும், சிறிய வீடாக இருந்தாலும், அதன் ஆயுளை தீர்மானிப்பது தரமான கட்டுமான பொருட்கள் தான். இந்தியாவின் கட்டுமான துறையானது உள்ளூரில் தயாரிக்கப்படும் பல்வேறு மூலப் பொருட்களை ஒருங்கிணைக்கிறது. ஆனால் சிவில் அல்லது வணிக கட்டிடத்தின் ஆயுள், கட்டுமான பொருட்களின் சரியான தேர்வு மற்றும் சிறந்த தரத்தை பொறுத்தது. ஒரு கட்டிடத்தின் திட்டத்தை வரைவு செய்யும் போது, அதற்கு பயன்படுத்தப்படும் பொருட்களை கவனமாக தேர்ந்தெடுக்க வேண்டும், அப்போதுதான் நம் எதிர்பார்ப்புகள் சரியாக நிறைவேற்றப்படும். TMT கம்பிகள் முதல் சிமெண்ட் வரை முக்கியமான பொருட்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவை இல்லாமல் எந்த ஒரு கட்டுமான திட்டமும் முழுமையடையாது.

## TMT கம்பிகள்

TMTகம்பிகள் கட்டிடத்தின் ஆயுளை தீர்மானிக்கிறது. எனவே ஒரு கட்டிடத்திற்கான சிறந்த TMT கம்பியை தேர்ந்தெடுப்பது எல்லாவற்றையும் விட முக்கியமானது. உயர் தரமான TMT கம்பிகளே உங்கள் வீடு நிலைத்து நிற்பதையும், நீண்ட ஆயுளோடு இருப்பதையும் உறுதி செய்கிறது. TMT கம்பியை தேர்ந்தெடுக்கும் போது, அவை ரிப்ட் (Ribbed) செய்யப்பட்டவை என்பதையும், அவற்றின் வளைக்கும் திறனையும் உறுதிப்படுத்த வேண்டும். இவை பல செயல்முறைகளை கொண்டு தயாரிக்கப்படுகின்றன. எனவே அவை விரியும் தன்மையுடன் பூகம்பங்களிலிருந்தும் கட்டிடத்தைப் பாதுகாக்கின்றன. சமீபத்தில் கட்டுமான கம்பியில் ஏற்படும் அரிப்பை தடுக்கும் CRS (Corrosion Resistant Steel) கம்பிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை கட்டிடத்தின் ஆயுள்காலத்தை 40% வரை நீட்டிகிறது. TMT கம்பிகள் முக்கியமாக கரையோரப் பகுதிகளிலும், உப்பு தன்மை அதிகம் உள்ள பகுதிகளிலும் கம்பியில் ஏற்படும் அரிப்பை தடுக்க பயன்படுத்தப்படுகிறது. எ.கா: AMMAN-TRY-ன் தொழிற்சாலைகளில், மூலப்பொருட்களை சூடாக்குவது, உருட்டல், TMT Process வெப்பத்தை தணித்தல் ஆகிய செயல்முறைகளை பயன்படுத்தி TMT கம்பிகள் தயாரிக்கப்படுகின்றன. AMMAN-TRY CRS கம்பிகள் வழக்கமான TMT கம்பிகள் விலையில் கிடைக்கின்றது.



## செங்கல்



கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் அடுத்த முக்கியமான பொருள் செங்கல். சிறிய கட்டிடம் அல்லது அடுக்குமாடி கட்டிடமாக இருந்தாலும், செங்கல் கட்டுமானப் பொருட்களில் தவிர்க்க முடியாதவை ஆகும். செங்கல் அடிப்படையில் களிமண் மற்றும் மணலால் ஆனவை. அவை தீயில் எரிக்கப்படுகின்றன. எனவே அதை உடைக்க கடினமானதாக இருக்கின்றது. அவை பல வடிவங்களில் கிடைக்கின்றது மற்றும் கட்டுமானத்திற்கு அதிக வலிமையை வழங்குகின்றது. செங்கல்களை தீர்மானிக்கும் போது சிமெண்ட் மற்றும் மணல் கலவையுடன் ஒன்றன் பின் ஒன்றாக வைக்கப்படுகிறது. இது ஒரு வலுவான பிணைப்பை உருவாக்குகிறது.

## மணல்

மணல் என்பது தளர்வான சிதைந்த பாறைகள், பவளப்பாறைகள் மற்றும் ஓடுகளின் மிகச் சிறிய துகள்களைக் கொண்ட இயற்கையாக உருவாகும் பொருளாகும். கட்டிடங்களின் வலுவை கூட்ட மணல் பயன்படுத்தப்படுகிறது. **Asphalt** மற்றும் **Concrete** போன்ற பிற கட்டுமான பொருட்களிலும் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலும் அனைத்து வகையான கட்டுமானங்களுக்கு பயன்படுத்தப்படும் Motar-ல் (Construction Paste) மணல் பயன்படுத்தப்படுகிறது. Motar-ன் அமைப்பு, சுருங்கும் தன்மை, வலிமை மற்றும் மேற்பரப்புப் பகுதியை உருவாக்குவதில் மணல் முக்கிய பங்கு வகிக்கிறது.



## சிமெண்ட்



சிமெண்ட் ஒரு நீர் சார்ந்த பைண்டர். இந்தியா முழுவதும் உள்ள அனைத்து வகையான கட்டுமானங்களுக்கும் முக்கிய பங்கு வகுக்கிறது. இது TMT கம்பிகள் மற்றும் செங்கல் போன்ற பிற கட்டுமானப் பொருட்களுடன் பிணைக்கப்பட்டு கட்டிடத்தின் வலிமையை நீட்டிக்கப் பயன்படுகிறது. சிமெண்டில் 2 வகைகள் உள்ளன: ஹைட்ராலிக் மற்றும் ஹைட்ராலிக் அல்லாதவை. ஹைட்ராலிக் வகை சிமெண்ட் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. தற்போது சிமெண்ட் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இது கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்பட்ட களிமண் மற்றும் பிற பொருட்களின் உபயோகத்தை மாற்றி இருக்கிறது. சிமெண்ட் தயாரிக்கும் முறையும் பயன்படுத்தும் முறையும் எளிதானது. கட்டிடத்திற்கு வலுவான பிணைப்பை வழங்குகின்றது.

**மேலே உள்ளவை நான்கும் தவிர்க்க முடியாத கட்டுமான பொருட்களாகும். எனவே புதிய கட்டிடத்தை கட்டும் போது மேலே உள்ள 4 பொருட்களிலும் சிறந்த தரத்தை தேர்வு செய்து கொள்ள வேண்டும்.**

**AMMAN-TRY**
TMT BARS




தமிழகத்தில் முன்னணி வகிக்கும், தரமும், உறுதியும் கொண்ட
TMT கம்பிகள் தயாரிக்கும் நிறுவனமான AMMAN-TRY
குடும்பத்துடன் இணையுங்கள்



## தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டத்திற்கு
## MARKETING ASSISTANT
## தேவை

**முன் அனுபவம்**

TMT கம்பிகள் விற்பனையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்

**கல்வி தகுதி :** பட்ட படிப்பு | **பணியிடம் :** தமிழகம் முழுவதும்

விருப்பம் உள்ளவர்கள் தங்களுடைய resume -ஐ

**jobs@ammantry.com**

என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு நேர்காணல் பற்றிய விவரம்
தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படும்.

IS : 2830 IS : 14650 IS : 1786

**AMMAN-TRY STEELS PVT LTD.,**
No. 15 & 16, Mannarpuram Main Road, Mannarpuram
Trichy – 620 020. For Support +91 75503 01234

info@ammantry.com www.ammantry.com Follow us...